ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1506/6 - 2007 ජූලි 18 වැනි බදාදා - 2007.07.18

1506/6 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவைக் கட்டணச் சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2007 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு,
2007, யூலை 18.

ஒழுங்குவிதிகள்

2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கு ஏற்ப 2007, யூன் 20 ஆந் திகதிய 1502/10 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைகள் பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும்.

பந்தி 2.1 இன் சொற்கள் மற்றும் தொகைகளை நீக்குவதன் மூலம்,

"ஒழுங்குவிதி 3 இன் ஏதேனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வியாபாரம் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் அல்லது பங்குடைமை ஒன்று 2007, ஏப்பிறல் 1 ஆந் திகதியோ அல்லது அதன் பின்னர் ஏதேனும் தொடர்புடைய காலாண்டு தொடர்பாக:

(i) அப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தகைய வியாபாரம் அல்லது வர்த்தகத்திலிருந்தான குறிப்பிட்ட காலாண்டிற்கான விற்பனைப் புறள்வினைக் கணித்தல் ;

(ii) மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவில் (அதிலுள்ள விதிவிலக்குகள் தவிர) ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளத் தேவையில்லை.

(iii) அவ்வாறு கணிப்பிடப்பட்ட விற்பனைப் புறள்விற்கான பொருளாதார சேவைக் கட்டணத்தை மேற்குறிப்பிட்ட சட்டத்திற்காக அட்டவணையில் 12 ஆம் விடயத்தில் குறிப்பிட்ட வீதத்தில் கணிப்பிடவும்."

மற்றும் சொற்கள் மற்றும் தொகைகளை பிரதியீடு செய்வதன் மூலம் -

"ஒழுங்குவிதி 3 அல்லது 4 இன் ஏதேனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வியாபாரம் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் அல்லது பங்குடைமை ஒன்று 2007, ஏப்பிறல் 1 ஆந் திகதியோ அல்லது அதன் பின்னர் ஏதேனும் தொடர்புடைய காலாண்டு தொடர்பாக :

(i) அப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தகைய வியாபாரம் அல்லது வர்த்தகத்திலிருந்தான குறிப்பிட்ட காலாண்டிற்கான விற்பனைப் புறள்வினைக் கணித்தல் ;

(ii) மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவில் (அதிலுள்ள விதிவிலக்குகள் தவிர) ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளத் தேவையில்லை.

(iii) அவ்வாறு கணிப்பிடப்பட்ட விற்பனைப் புறள்விற்கான பொருளாதார சேவைக் கட்டணத்தை மேற்குறிப்பிட்ட சட்டத்திற்காக அட்டவணையில் 12 ஆம் விடயத்தில் குறிப்பிட்ட வீதத்தில் கணிப்பிடவும்." எனவே.

*08-78*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.